# திருமணப் பொருத்தம்

இல்லறத்தில் ஈடுபடப் போகும் ஓர் ஆணின் குணமும், ஒரு பெண்ணின் குணமும் ஒன்றுக்கொன்று இசைவான இணக்கத்தோடு இருந்தால் மட்டுமே சந்ததி விருத்தி அடையும். இதை அறிந்து கொள்ளும் கண்ணாடியாகத் திருமணப் பொருத்தம் விளங்குகிறது. இதற்கு நட்சத்திரப் பொருத்தம், செவ்வாய் தோஷ நிர்ணயம், ராகு–கேது தோஷ நிர்ணயம், தசா சந்தி மற்றும் ஏக தசை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு கணிக்கும் போதுதான் அது முழுமையான பொருத்தமாக இருக்கும்.

நட்சத்திரப் பொருத்தத்தைப் பொறுத்த வரை தினம், கணம், யோனி , ராசி , ரச்சு ஆகிய ஐந்தும் முக்கியமானவை. தினப் பொருத்தத்தில் "வத வைநாசிகம்" வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். செவ்வாய் தோஷத்தைப் பொறுத்த வரை இருவருக்கும் செவ்வாய் இருக்கலாம், சுத்தமாகவும் இருக்கலாம், பரிகார செவ்வாயாகவும் இருக்கலாம். அல்லது ஒன்று பரிகாரச் செவ்வாயாக இருந்து இன்னொன்று செவ்வாய் இல்லாமலும் இருக்கலாம்.

ராகு–கேது தோஷத்தைப் பொறுத்த வரை லக்னத்திலோ அல்லது இரண்டாமிடத்திலோ ராகுவோ, கேதுவோ இருந்தால் அது ராகு–கேது தோஷம் எனப்படும். நடப்புத் தசைகள் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஓரே காலக் கட்டத்தில் முடிவடையும் போது இடைப்பட்ட கால வித்தியாசம் ஓர் ஆண்டுக்குள் இருந்தால் அது தசா சந்தி எனப்படும். பொதுவாகத் தசாசந்தி வரக்கூடாது.

நடப்புத் தசையானது ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே கிரகத்தின் தசையாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அதற்கு ஏக தசை என்று பெயர். இதுவும் கூடாது.

இவ்வாறு, நட்சத்திரப் பொருத்த ஆய்வு , செவ்வாய் தோஷ ஆய்வு , ராகு–கேது தோஷ ஆய்வு , தசாசந்தி ஆய்வு மற்றும் ஏகதசை ஆய்வு ஆகிய 5 முறைகளில் ஆய்வுகள் செய்து திருமணப் பொருத்தத்தைத் தெளிவாக வெளியிடுகிறோம்.

குறிப்பு : இதற்கான மென்பொருளை (Software) சொந்தமாக நாங்களே உருவாக்கி உள்ளோம். இதில் முக்கியமாக ஆண், பெண் – ஆகிய இருவரது கிரகநிலை ஆய்வுகளைத் தகுந்த ஜோதிடர் மூலம் சரிபார்த்த பின்னர் திருமண ஏற்பாடுகளைத் தொடங்குவது நலம்.

Paba Sree Computers, Opp : Bus Stand, Gobichettipalayam. Cell : 99429 18756. Email : paabaaravi@gmail.com.